**வாக்குமூலம்**
**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 6 |
| நாள் | : | 12.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகேஷ் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | முனுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**1, 3, 6 எதிரிகள் ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**
**முதல் விசாரணை :**

நான் தற்போது புன்னப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். லாரி டிரைவராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் சம்பவ இடத்தில் வரைப்படம் வரைந்தார்கள் என்றும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றும், அதில் என்ன எழுதியது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.6** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01.08.2023ம் தேதி மாலை 6.15 மணிக்கு வெம்பேடு கிராமத்தில் நடைபெறும் சவுடு குமாரியின் மண் எடுக்க TN 12 AS 8466 என்ற லாரியில் சென்று கொண்டிருந்த போது குவாரியில் போலிசார் பொது ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும், என்ன என்று கேட்ட போது மதியம் 2.00 மணிக்கு எதிரி பிரேம் மற்றும் 5 நபருடன் குவாரியில் இலவசமாக மண் போடமாடாயா என்று கேட்டு தகராறு செய்ததாகவும், ஜெ.சி.பி டிரைவரை மற்றும் ஓனரை மிரட்டியதாகவும், இது சம்மந்தமாக போலிசார் வழக்கு பதிந்து அந்த

இடத்தில் பார்வை செய்தார்கள் என்றும், அப்போது என்னையும் என்னுடன் இருந்த முருகன் என்பவரையும் தயாரிக்கும் பார்வை மகஜரில் சாட்சியாக இருக்கும்படி கேட்டுகொண்டார் என்றும், அது எங்கள் முன்னிலையில் இடத்தை பார்வை செய்து பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், மேலும் வரைப்படம் வரைந்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், முருகனும் கையொப்பம் செய்தோம் என கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.12 18:58:13 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 105/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 7 |
| நாள் | : | 12.11.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரந்தாமன் | ஜாதி | : | |
| தந்தை–பெயர் | : | முத்து | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**1, 3, 6 எதிரிகள் ஆஜர். 2, 4, 5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் வடமதுரை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் செங்கல் சூளையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் கேட்டதற்கு இணங்க தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மற்றப்படி இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01.08.2023 அன்று மதியம் 2.00 மணி அளவில் வெம்பேடு சவுடு மண் குவாரியில் வேலை செய்த நரசிம்ராஜ் என்கிற ராஜ் என்பவரை சில நபர்கள் தாக்கியதாகவும், அதனால் உடல் வலிக்கிறது என்னிடம் கூறினார் என்றும், அதன்படி 02.08.2023 அன்று அவரை திருவள்ளுர் அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றேன் என்றும், அவரை அவசர சிகிச்சை பிரிவில் காண்பித்து முதல் உதவி சிகிச்சை பெற்ற பின் வேறு ஒரு சிகிச்சை பிரிவுக்கு அவரை மருத்துவர்கள் பரிந்துரைத்தார்கள் என்றும், ஆனால் அவர் உடல் நிலை நன்றாக இருப்பதாகவும், மேல் சிகிச்சை வேண்டாம் என்று கூறியதனால் நாங்கள்

வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றும், இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.11.12 18:58:21 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.